# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

### செயன்முறை தொழில்நுட்பத்திறன்கள்

**தரம்: 08**

1319

சுட்டெண்:.......................................... நேரம்: 2 மணித்தியாலம்

## பகுதி – I

❖ **மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(01) விலங்குகளை முழு நேரமும் மனையில் அடைத்து அவ்விலங்குகளிற்குத் தேவையான உணவு, நீர் என்பன பாத்திரங்களில் வழங்கப்பட்டு மேற்கொள்ளப்படும் விலங்கு வளர்ப்பு முறை
1) தீவிர முறை
2) அரைத்தீவிர முறை
3) அரைத்திறந்தவெளி வளர்ப்பு முறை
4) திறந்தவெளி வளர்ப்பு முறை

(02) பாலை நொதிக்கச் செய்து தயாரிக்கப்படும் பாலுற்பத்திப் பொருட்கள்
1) பால்மா, ரின்பால்
2) யோகட், தயிர்
3) தகரத்திலடைத்த பால், கிருமியழிக்கப்பட்ட பால்
4) பாய்ச்சராக்கம் செய்யப்பட்ட பால், பட்டர்

(03) உணவுப்பொருட்களை $-18^{0}C$ வெப்பநிலை களஞ்சியப்படுத்துதல் எவ்வாறு அழைக்கப்படும்
1) குளிரூட்டல் என
2) நீரகற்றல் என
3) செறிவாக்கல் என
4) ஆழ்குளிரூட்டல் என

(04) பூகோள வெப்பமடைதலுக்குச் காரணமான வாயுக்களாகக் கருதப்படுபவை
1) ஒட்சிசனும், நைதரசனும்
2) காபனீரொட்சைட்டும், மீதேனும்
3) ஐதரசனும், ஒட்சிசனும்
4) நைதரசனும், குளோரினும்

(05) குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்படும் மரக்கறிகள், பழங்கள், சமைத்த உணவுகள் என்பன உலர்வடைவதனைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளத்தக்க நடவடிக்கை
1) தண்ணீர் தெளித்தல்
2) உணவுடன் நீர்விட்டு வைத்தல்
3) உணவு வகைகளைத் திறந்து வைத்தல்
4) பொலித்தீன் உறைகள் அல்லது பொருத்தமான கொள்கலன்களில் இட்டு வைத்தல்

(06) பின்வருவனவற்றுள் பாண்டலடைவதன் மூலம் பழுதடையும் உணவுப் பொருட்களாக அமைவன
1) அப்பிள், வாழைக்காய்
2) ஈரப்பற்றான விசுக்கோத்து, மரவள்ளிக் கிழங்கு
3) பட்டர், தேங்காய் எண்ணெய்
4) பாண், காய்ச்சிய பால்

(07) உணவு தயாரிப்பவர் பின்பற்ற வேண்டிய சுகாதார ரீதியான நடவடிக்கைகளாக அமைவது
1) கைகளைச் சவர்க்காரமிட்டு கழுவிச் சுத்தமாக்கல்
2) உணவு சமைப்பதற்குப் பயன்படும் கையுறை அணிதல்
3) தலைக்கவசம் அணிதல்
4) மேற்கூறிய யாவும் சரி

(08) பப்பாசியை அறுவடை செய்ய பொருத்தமான பருவமாக கருதப்படுவது
1) காய் கடும்பச்சை நிறத்திலிருந்து இளம்பச்சை நிறமாக மாறும் போது
2) காய் முழுவதும் மஞ்சள் நிறமாக மாறிய போது
3) காய் பச்சை நிறத்திலிருந்து மஞ்சள் நிறமாக மாறும் போது
4) காயில் நிறமாற்றம் எதுவும் ஏற்படாத போது



kalvi.lk

(09) உராய்வைக் குறைப்பதற்கு உராய்வு நீக்கிகளாகப் பயன்படுத்தப்படுபவை

1) என்ஜின் ஒயில், கிறிஸ் 2) பெயின்ற, ரின்னர்

3) மண்ணெண்யை, டீசல் 4) பெற்றோல், மரக்கறி எண்ணெய்

(10) பின்வருவனவற்றுள் குண்டுப்போதிகையின் (Ball Bearing) பயன்பாடாகக் கருதப்படுவது

1) உராய்வைக் குறைத்தல் 2) உராய்வை கூட்டல்

3) உராய்வில் மாற்றத்தை ஏற்படுத்தாதிருத்தல் 4) மீதமாகவுள்ள இடத்தை நிரப்பல்

(11) பின்வருவனவற்றுள் ஏற்றத்தை தற்காலிகமாக சேமித்து வைக்கும் இலத்திரனியல் துணைக்கூறு

1) தடையி (Resistor) 2) கொள்ளளவி (Capacitor)

3) திரான்சிஸ்ரர் ( Transistor) 4) இருவாயி (Diode)

(12) புறத்தேயிருந்து கிடைக்கும் ஒளியின் அளவிற்கு ஏற்ப தடை மாறுபடும் துணைக்கூறாக கருதப்படுவது

1) ஒளிகாலும் இருவாயி ஆகும் (LED)

2) இருவாயி (Diode) ஆகும்

3) அஞ்சலி (Relay) ஆகும்

4) ஒளியுணர் தடையி (Light Dependent Resistor) ஆகும்

(13) இருவாயி (Diode) இன் இரு முனைவுகளாகக் கொள்ளப்படுபவை

1) சேகரிப்பான் (Collector), அடி (Base) 2) அனோட்டு (Annode), கதோட்டு (Cathode)

3) காலி (emitter), அடி (Base) 4) மேற்கூறிய யாவும் சரி

(14) வீடுகளில் மடித்து வைக்கும், உத்திக்கு உதாரணமாக அமையத்தக்க உபகரணங்களாக அமைவன

1) உளித்தொகுதியும், பல்நோக்கு உபகரணத்தொகுதியும்

2) கடதாசிப்பெட்டியும், அலுமாரியும்

3) வானொலியின் வான்கம்பியும், குடையும்

4) பிளாத்திக்கு கோப்பையும், தொலைபேசியும்

(15) MS word மென்பொருளை இயக்குவதற்கான அடிப்படையான கட்டளைகளைக் கொண்டது.

1) Building Bar ஆகும் 2) Menu Bar ஆகும்

3) Standard Bar ஆகும் 4) Formatting Tool Bar ஆகும்

(16) காய்களை அறுடை செய்யும் போது நிலத்தில் விழுவதனால் ஏற்படும் நசிதலை குறைப்பதற்கு மேற்கொள்ளத்தக்க நடவடிக்கை

1) மரப்பெட்டியில் ஏந்துதல்

2) விசேட அறுவடை உபகரணங்களைப் பயன்படுத்தல்

3) மரத்திலிருந்தபடியே அறுத்து வீழ்த்துதல்

4) கையால் கவனமாகப் பிடித்தல்

(17) கிருமியழித்தல் மூலம் நீண்டகாலம் பேணப்படும் உணவுப்பொருட்கள்

1) பால், தகரத்திலடைத்த மீன் 2) யோகட், மீன்

3) கத்தரி, சாம்பல் வாழை 4) பட்டர், தயிர்

(18) பின்வருவனவற்றுள் ஆக்கிரமிப்புத் தாவரங்களாக கருதப்படக் கூடியவை

1) நீர்முள்ளியும் வயல் அன்னமுண்ணாவும் 2) நீர்ச்சேம்பும் ஆற்றவாழையும்

3) சல்வீனியாவும் ஜப்பானிய ஜக்கோணியாவும் 4) தாமரையும் கிண்ணையும்

(19) அறிவுறுத்தல், ஊக்கப்படுத்துதல், நினைவூட்டல் என்பன எவற்றின் அடிப்படைக் கூறுகளாகக் கொள்ளப்படுகின்றது

1) விற்பனை மேம்படுத்தலின் அடிப்படைக் கூறுகளாக

2) உற்பத்திக் கிரயத்தின் அடிப்படைக் கூறுகளாகும்

3) சந்தை ஆய்வின் வகைகளாகும்

4) விளம்பரத்தின் அடிப்படைக் கூறுகளாகும்.

(20) பின்வருவனவற்றுள் உணவு வகைகளைக் கிருமியழிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்

1) ஆழ்குளிரூட்டிகள் (Deep Freezers) 2) குளிரூட்டிகள் (Refrigerators)

3) அமுக்கவடுகலன் (Antoclave) 4) நீரகற்றிகள் (Dehydrators)

(20x1=20புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

❖ **முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய இரண்டு வினாக்களைத்தெரிவு செய்து மொத்தமாக மூன்று வினாக்களிற்கு விடை துருக.**

**(01)** நீர் பாடசாலையில் மேற்கொண்ட பாடசாலைத் தோட்டத்தில் பெற்றுக்கொண்ட அனுபவத்தைக் கொண்டு வீட்டிலே திட்டமிட்டு அமைத்த வீட்டுத்தோட்டம் தொடர்பாக பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.

1) திட்டமிட்ட முறையில் வீட்டுத்தோட்டத்தை அமைப்பதனால் கிடைக்கத்தக்க பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

2) a) வீட்டுத்தோட்டத்தில் மண்ணீர்க்காப்பிற்காக பயன்படுத்தத்தக்க நீர்ப்பாசன முறை ஒன்றினைக் குறிப்பிடுக.

b) பயிர் செய்வதற்கு இடவசதி பற்றாக்குறையான பிரதேசங்களில் மேற்கொள்ளத்தக்க பயிர்ச்செய்கை முறை ஒன்றினைக் குறிப்பிடுக.

3) வீட்டுத்தோட்டத்தில் மண்ணரிப்பைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளத்தக்க இரண்டு நடவடிக்கைகளை எழுதுக.

4) வீட்டுத்தோட்டத்தில் பயிர்ச்சேதத்தைக் குறைப்பதற்கு எடுக்கத்தக்க நடவடிக்கை இரண்டினைக் குறிப்பிடுக.

5) a) நீர்வடிப்புக் குறைவான நிலத்தில் அமைக்கத்தக்க பாத்தியொன்றினைக் குறிப்பிடுக.

b) வீட்டுத்தோட்டத்தில் இலை மரக்கறிகளை அறுவடை செய்வதற்குப் பொருத்தமான நேரம் எதுவெனக் குறிப்பிடுக.

(2x5=10புள்ளிகள்)

**(02)** 1) விளம்பர ஊடகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

2) a) கடனீரேரிகளின் பயன்பாடு ஒன்றினைக் குறிப்பிடுக.

b) இலங்கையில் குளங்கள் அதிகமாகக் காணப்படும் வலயம் எதுவெனக் குறிப்பிடுக.

3) வீட்டு மின் உபகரணங்களைப் பயன்படுத்தும்போது பின்பற்றவேண்டிய விடயங்கள் இரண்டினை எழுதுக.

4) தெங்குப்பயிர்ச்செய்கையுடன் தொடர்புபட்ட உற்பத்திகள் இரண்டினைப் பெயரிடுக.

5) a) விளம்பரத்தின் அடிப்படை நோக்கம் எதுவென எழுதுக.

b) தரமான பொருளொன்றின் முக்கிய அம்சம் ஒன்றினை எழுதுக.

(2x5=10புள்ளிகள்)

**(03)** 1) பண்ணை விலங்குகளை வளர்ப்பதனால் கிடைக்கத்தக்க பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக..

2) a) இலங்கையின் தரக்கட்டளைகள் நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் தரச்சான்றிதழின் தரக்குறியீடு எதுவெனக் குறிப்பிடுக.

b) சர்வதேச தரநிர்ணய நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் சர்வதேச தரச்சான்று எதுவெனக் குறிப்பிடுக.

3) சூழல் மாசடைவதனால் ஏற்படத்தக்க பாதகமான விளைவுகள் இரண்டினை எழுதுக.

4) பழுதடைந்த உணவில் காணத்தக்க இயல்புகள் இரண்டினைத் தருக.

5) a) மின் சுற்றுக்களில் காட்டியாகப் பயன்படும் துணைக்கூறு எதுவெனக் குறிப்பிடுக.

b) ஆளியின் பயன்பாட்டை எழுதுக.

(2x5=10புள்ளிகள்)



kalvi.lk

(04) 1) நீரகற்றல் மூலம் நீண்டகாலம் பேணத்தக்க உணவுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

2) a) மின்பற்றாசுக்கோலின் பயன்பாடு எதுவெனக் குறிப்பிடுக.

b) வெட்டுக்குறடு பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் எதுவென எழுதுக.

3) சாடிப் பயிர்ச்செய்கை முறையில் பயன்படுத்தத்தக்க சாடி வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

4) யோகட் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களில் ஜெலற்றின் தவிர்ந்த வேறு இரு பொருட்களைக் குறிப்பிடுக.

5) a) வீட்டு உபகரணங்களை உரிய பராமரிப்பின்றிப் பயன்படுத்துவதனால் ஏற்படத்தக்க பாதிப்பு ஒன்றினைக் குறிப்பிடுக.

b) மின் சமிக்ஞைகளை ஒலிக்சமிக்ஞையாக மாற்றும் இலத்திரனியல் துணைக்கூறு எதுவெனக் குறிப்பிடுக.

(2x5=10புள்ளிகள்)

(05) 1) துவிச்சக்கர வண்டியொன்றின் இயங்கும் பகுதிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

2) a) துவிச்சக்கர வண்டியை மிதிக்கும் போது சங்கிலியில் எழுப்பப்படும் ஒலியைச் சீர்செய்வதற்கு மேற்கொள்ளளத்தக்க நடவக்கையொன்றினைக் குறிப்பிடுக.

b) வீட்டில் பயன்படுத்தப்படும் மின்சூளிலுள்ள (டோச்) இறுக்கமடைந்த ஆளியினைச் சீர்செய்வதற்கு மேற்கொள்ளத்தக்க நடவடிக்கை ஒன்றினைக் குறிப்பிடுக.

3) அடுக்கிவைக்கும் உத்திக்கான உதாரணங்கள் இரண்டினை எழுதுக.

4) இலத்திரனியல் சுற்றுக்களை ஒருங்கு சேர்ப்பதில் அதிகளவு பய்னபடுத்தப்படும் சுற்றுப்பலகைகள் இரண்டின் பெயர்களைத் தருக.

5) a) பன்புல்லை மூலப்பொருளாகப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பொருளொன்றைக் குறிப்பிடுக.

b) மனிதனால் குளங்கள் நிர்மாணிக்கப்படடதன் பிரதான நோக்கங்களிலொன்றைக் குறிப்பிடுக.

(2x5=10புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457